# 16. புலம்பெயர் இலக்கியத் திறனாய்வு

முன்னுரை – சொல் விளக்கமும், வரையறையும் - கால வரிசையில் புலம்பெயர் சமூகம் - புலம்பெயர் வாழ்விற்கான பல்வேறு காரணங்கள் - புலம்பெயர் சமூகத்தின் பல்வேறு பண்புகள்.

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் முக்கியமான ஒரு சொற்கூட்டு அடிக்கடிப் பயின்று வருவதைச் சங்க இலக்கிய வாசகர் அனைவரும் கவனித்திருக்கலாம். 'பதியெழு அறியாப் பழங்குடி' என்பதுதான் அந்தச் சொற்கூட்டு. அதாவது அரசியல் காரணமாகவோ அல்லது பொருளாதாரம் காரணமாகவோ எதன் பொருட்டும் தான் வாழ்கின்ற பதியை (ஊரை) விட்டு நீங்காத பழமையான குடி என்பது அதற்குப் பொருள். இவ்வாறு சொந்த வாழிடம் விட்டு இடம்பெயராத ஒரு வாழ்க்கையை மிகப் பெருமையாகக் கொண்டாடுகிற மனநிலையை இந்தச் சொற்கூட்டுப் புலப்படுத்தி நிற்கிறது. ஆனால் உண்மையில் பார்த்தால் மேய்ச்சல் சமூகம், வேட்டைச் சமூகம் என ஆதிகாலச் சமூகத்தில் இருந்தே மனிதர்கள் தங்கள் இரைக்காக அல்லது தங்கள் வளர்க்கும் ஆடு, மாடுகளின் இரைக்காக இடம்பெயர்ந்து கொண்டேதான் இந்த வாழ்க்கையை வாழ்ந்து தீர்க்க வேண்டிய இயற்கை நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறார்கள். எனவேதான் சங்கப் புலவர்கள் இடம் பெயராது பிறந்த இடத்திலேயே வாழ்ந்து முடித்துவிட ஆசை கொண்டு அஃப்படியொரு கனவு வரிகளை எழுதி மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். சங்க இலக்கியத்தில் வரும் ஆற்றுப்படை இலக்கியம் புலம்பெயர் இலக்கியத்திற்கு ஒரு முன்னோடி என்றே கொள்ளத்தக்க அளவில் அமைந்துள்ளது. தொடர்ந்து சிலப்பதிகாரம்

போன்ற ஐம்பெருங்காப்பியங்களிலும், இதிகாசங்களிலும் மனிதர்கள் நிலப்பரப்பு முழுவதும் வாழ்தலுக்கான ஆதாரங்களைத் தேடிப் புலம்பெயர்ந்து கொண்டே அலைகின்ற காட்சிகளைத்தான் காண முடிகிறது.

புலம்பெயர்தலுக்கான அடிப்படைக் காரணங்களாக அமைபவை எவை என்று பார்த்தால் இரண்டை முக்கியமாகக் கூறலாம்.

1. அரசியல் காரணம்
2. பொருளாதாரக் காரணம்

நாடு, அரசு, அதிகாரம் என்று மனித நாகரிகம் வளர்ச்சியடைந்த சூழலில் அரசியல் போர்கள் உக்கிரமாக வெடித்துக் கிளம்பும் போது மனிதர்கள் சிதறிப் புலம்பெயர்ந்து விழுந்துள்ளார்கள். இதேபோல் சொந்த நாட்டில் அடிப்படையான தேவைகளைக்கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத அளவிற்குப் பொருளாதார நெருக்கடி உருவாகிற சூழலில் பெருவாரி மக்கள் தங்களுக்கான வாழ்வாதாரங்களைத் தேடிப் புலம்பெயர்ந்து போய்க் குடியேறுவதும் நிகழ்ந்துள்ளது. அடிப்படைத் தேவைக்கு மட்டும் இல்லாமல் தங்கள் வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதற்காக வளமான நாடுகளை நோக்கிப் புலம்பெயர்வதும் நிகழ்ந்துள்ளது. மனித வரலாறுதோறும் புலம்பெயர்தலுக்கான காரணங்களாக வினைபுரிந்துள்ள இவைகள்தான் இன்றும் தொடர்கின்றன. சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவின் மிகப்பெரிய காலனித்துவ ஆட்சி நிர்வாக முறையினால் புலம்பெயர் வாழ்வு பெருகியது. இந்த நூற்றாண்டில் தோன்றியுள்ள சந்தைப் பொருளாதாரம் மற்றும் உலகமயமாதலை வளர்த்தெடுக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்முறைகளினாலும், தகவல் தொடர்பு ஊடகங்களில் புகுந்துள்ள மின்னணுக் கருவிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் மிகப்பெரிய அளவில் புலம்பெயர்தல் என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த மிகத் தீவிரமான புலம்பெயர் வாழ்க்கை முறையின் விளைவாக இலக்கிய ஆக்கத்திலும் இது எதிரொலிக்கிறது. எனவே புலம்பெயர் இலக்கியம், புலம்பெயர் திறனாய்வு ஆகிய மொழியாடல்கள் இலக்கியக் கல்வியில் இடம்பெறத் தொடங்குகின்றன. நவீனத்துவக் காலத்தில் தோன்றிய இந்தப் புலம்பெயர் குறித்த சொல்லாடல், பழங்குடியினர் செவ்வியல் காலத்தில் புலம்பெயர்ந்ததில் இருந்து முற்றிலும் வேறான குணங்களைக் கொண்டது. எனவே இந்த நவீனப் புலம்பெயர் சொல்லாடலைச் செவ்வியல் காலப் புலம்பெயர் வாழ்வோடு பொருத்திப் பார்ப்பது முறையாகாது.

## சொல் விளக்கமும், வரையறையும்

ஆங்கிலத்தில் புலம்பெயர் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகிய 'டையாஸ்பரா' (Diaspora) என்ற சொல் 'டையாஸ்பிர்' (Diaspeir) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிறந்ததாகும். இச்சொல்லுக்குப் பொருள் 'தூவுதல்' என்பதாகும். இச்சொல் தாவரவியலில் தாவரங்களின் விதைகள் தூவப்படுவதைக் குறிப்பதற்குப் பயன்பட்டது. இப்பொழுது மனிதர்கள் உலகப் பரப்பு முழுவதும் சிதறித் தூவப்படும் காட்சியைக் குறிப்பதற்குப் பயன்படுகிறது[1].

1991-இல் வெளிவந்த 'டையாஸ்பரா' (Diaspora) என்ற இதழின் ஆசிரியர் 'காச்சிக் டோலோலியான்' (Khachig Tololyan) என்பார் 'நாடு கடந்து முன்மாதிரியாக அமையும் ஒரு சமூகம்' என இந்தப் புலம்பெயர் சமூகத்தை வரையறைப்படுத்துகிறார். 'சைட்டிக் வால்கர்' (Citing Walker) என்பவர் இந்தப் புலம்பெயர் சமூகத்தை இன்னும் தெளிவாக இப்படி வரையறுக்கிறார். "தாய் மண்ணிலிருந்து பிரிந்து போய் வெளி நாட்டில் வாழுகின்ற ஒரு மக்கள் கூட்டம்"[2]. இது மிகவும் முன்னேறிய முதலாளித்துவ உலகத்தில் அமைகின்ற ஒரு நாடு கடந்த சமூகத்தைக் குறிக்கிறது. இது பழைய இனக்குழுச் சார்ந்த செவ்வியல் காலப் புலம்பெயர் சமூகத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டது எனவும் அவர் விளக்கி விடுகிறார். புலம்பெயர்ந்து வாழும் சமூகத்தைக் காலவரிசைப்படி மூன்றாகப் பகுத்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

## கால வரிசையில் புலம்பெயர் சமூகம்

1. செவ்வியல் அல்லது நவீனத்துவத்திற்கு முந்திய புலம்பெயர் சமூகம் (காலனித்துவத்திற்கு முந்தைய சமூகத்தில் நிகழ்ந்தவை)

2. நவீனத்துவத்தின் தொடக்க காலப் புலம்பெயர் சமூகம் (காலனித்துவக் காலகட்டத்தில் பிஜி தீவின் கரும்புத் தோட்டத்திற்கும், இலங்கையின் தேயிலைத் தோட்டத்திற்கும், மலேசியாவின் இரப்பர் தோட்டத்திற்குமான புலம்பெயர்ந்த அல்லது புலம்பெயர்க்கப்பட்ட நிகழ்வுகள்)

3. நவீனத்துவத்திற்குப் பிந்தைய புலம்பெயர் சமூகம் (நவீன வளர்ச்சியடைந்த முதலாளித்துவச் சமூகத்தின் நிகழ்வுகள். சான்றாக, தகவல் தொழில்நுட்பத் தொழிலாளிகள், அரபு நாட்டிற்குச் செல்லும் தொழிலாளிகள்)

புலம்பெயர் இலக்கியமும், புலம்பெயர் திறனாய்வும் நவீனத்துவத்திற்குப் பிந்தைய புலம்பெயர் சமூகத்தை மையமிட்டே தோன்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் இப்புலம்பெயர் திறனாய்வு சமூகவியல், வரலாற்றியல், தத்துவவியல், உளவியல், பண்பாட்டியல், பொருளியல் முதலிய பல துறைகள் வழங்கும் அறிவு வளத்தையும் கொண்டு செயல்படும் பல்துறை சார் திறனாய்வு முறையாக விளங்குகிறது. இப்புலம்பெயர் சமூகம் தனியான, வித்தியாசமான சமூகமாக வடிவம் கொள்வதால் இச்சமூகம் குறிப்பிட்டுக் கூறத்தக்கச் சிறப்பான சில கலை இலக்கிய அழகியல் குணங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் தயாரித்து வழங்குவதாக விளங்குகிறது. எனவேதான் புலம்பெயர் திறனாய்வு என ஒன்று தனியாகத் தேவைப்படுகிறது.

## புலம்பெயர் வாழ்விற்கான பல்வேறு காரணங்கள்

பூமிப்பரப்பு முழுவதும் இந்த வளர்ச்சியடைந்த முதலாளித்துவச் சமூகத்தில் பல்வேறு வகையான புலம்பெயர் சமூக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாட்டிலும் நிகழ்கின்ற உள்நாட்டு அரசியல் கலவரங்களினால் உருவாகின்ற அகதிகள் பக்கத்து நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து ஒரு சமூகமாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு வாழ முனைகின்றனர் (இலங்கையில் நடந்த ஈழப் போரினால் இந்தியா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா என்று ஏறத்தாழ 60 நாடுகளில் அகதிகளாகப் புலம்பெயர்ந்துள்ளனர் ஈழத் தமிழர்கள்).

வேற்று நாட்டின் படையெடுப்பினால் உள்நாட்டுக்குள்ளேயே புலம்பெயர்ந்து உள்நாட்டுக்குள்ளேயே அகதிகளாக ஒருவகையான புலம்பெயர் சமூகம் உருவாகி வாழ்ந்து கொண்டிருக்கிறது (அமெரிக்காவின் ஈராக் படையெடுப்பினால் ஏறத்தாழ 20 இலட்சம் ஈராக் மக்கள் அகதிகளாக உள்நாட்டுக்குள்ளேயே புலம்பெயர்ந்து வாழுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். இதுபோலவே இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரினாலும் இலட்சக்கணக்கான மக்கள் உள்நாட்டுக்குள்ளேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்).

அரபு நாடுகளில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டதனால் வேலை வாய்ப்பைத் தேடி இந்தியாவைச் சேர்ந்த இலட்சக்கணக்கான

மக்கள் புலம்பெயர்ந்து அரபு நாடுகளில் ஒரு சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தகவல் தொடர்பு ஊடகங்களின் வளர்ச்சியினால் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கு இந்தியா உட்பட உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு நாட்டு மக்கள் புலம்பெயர்ந்து தங்கள் அடையாளங்களோடு ஒரு சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் (சான்றாக, அமெரிக்காவில் இந்தியாவில் இருந்து குடியேறிய பல்வேறு இனத்தினரான இந்துக்கள், சீக்கியர்கள் தங்கள் தங்கள் அடையாளங்களோடு புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்).

இதேபோல் முதலாளித்துவமும் முதலீடுகளும் பன்னாட்டு நிறுவனங்களின் நடைமுறையினால் நாடு கடந்ததாக வினைபுரிந்து கொண்டிருக்கிறது. எனவே முதலீடுகளை உலகம் முழுவதும் விதைக்கும் வளமான ஆதிக்க நாட்டைச் சார்ந்தவர்களும் மற்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ வேண்டிய ஒரு சூழலை வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் ஏற்படுத்தியுள்ளது.

நவீன முதலாளித்துவத்தின் காரணமாகத் தொழில் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, எழுத்தாளர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள், மாணவர்கள் முதலிய கலை இலக்கியவாதிகளும் புலம்பெயர்ந்து வாழ்வதோடு தாங்கள் புலம்பெயர்ந்த நாட்டு மொழியிலேயே கலை இலக்கியங்களைப் படைத்தளிக்கின்ற நிலையும் நிலவுகிறது.

இவ்வாறு பல்வேறு வகையான புலம்பெயர் சமூகம் உலகப் பரப்பு முழுவதும் நவீன முதலாளித்துவச் சமூகத்தில் நிலவுகின்றது. வில்லியம் சாப்ரான் (William Safran) கீழ்க்கண்ட பெரிதும் விவாதத்திற்குரிய ஆறு வகைகளின் கீழ் இவைகளை அடையாளப்படுத்திக் காட்டுகிறார்:-

1. நாடு கடத்தப்பட்டவர்கள்
2. நாட்டை விட்டு வெளியேறியவர்கள்
3. அரசியல் அகதிகள்
4. வேற்று நாட்டில் தங்கியிருப்பவர்
5. வெளிநாட்டில் குடியுரிமை பெற்றவர்
6. தேசிய இனச் சிறுபான்மையினர்[3]



5

## புலம்பெயர் சமூகத்தின் பொதுவான பண்புகள்

மேற்கண்டவாறு அமைகின்ற புலம்பெயர் சமூகத்தின் உறுப்பினர்கள் கீழ்க்கண்ட பொதுவான பண்புகளைக் கொண்டு விளங்குவர் என்றும் அவர் விள்க்குகின்றார்:-

1. ஒரு புலம்பெயர் சமூகத்தினர் அல்லது அவர்களுடைய முன்னோர்கள் குறிப்பிட்ட அவர்களுக்கேயுரிய சொந்தமான ஒரு நாட்டில் இருந்து சிதறிப் பரவி வெளிநாட்டில் ஒரு சமூகமாகக் கூடி வாழ்வர்.

2. இவர்கள் தங்கள் தாய் மண்ணிற்கேயுரிய பொதுவான கூட்டு நினைவுகளை, இலட்சியங்களை, தொன்மங்களைத் தக்கவைத்துக் கொள்வர். தங்கள் தாய் நாட்டினுடைய ஊர்ப் பெயர்களை, இடங்களை. வரலாறுகளை, சாதனைகளை மறக்காமல் காப்பாற்றி வருவர்.

3. இவர்கள் தாங்கள் புலம்பெயர்ந்திருக்கும் நாட்டிலுள்ள சமூகத்தினரால் முழுமையாக அங்கீகரிக்கப்பட மாட்டோம் என்று நம்புவர். அதனால் தங்களை எப்பொழுதும் அந்தச் சூழல்களுக்கு அந்நியமானவர்களாகவே உணர்வார்கள்.

4. இவர்கள் தங்களுடைய முன்னோர்களின் தாய் நாடுதான் உண்மையாக மனத்திற்கு உகந்த வீடு போன்றது என்றும் திரும்பிச் செல்வதற்கான சூழல் பொருத்தமாக உருவானவுடன் தாய் நாட்டிற்குத் திரும்பி விடலாம் என்ற எண்ணத்துடனேயே வாழ்வர்.

5. இவர்கள் தங்களுடைய சொந்தத் தாய் நாட்டினுடைய வளத்தையும், பாதுகாப்பையும் கூட்டாகப் பாடுபட்டுக் காப்பாற்ற வேண்டும் என்ற நம்பிக்கையுடையவர்களாக விளங்குவர்.

6. இவர்கள் தொடர்ந்து தனிப்பட்ட முறையில் தனக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ தங்களுடைய தாய் நாட்டோடு ஏதாவது ஒரு வழியில் உறவு வைத்துக் கொள்வதைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டு வருவர்.

7. பொதுவாகவே இவர்களின் வாழ்வு என்பது இனம் சார் கூட்டு வாழ்வாகவும் தாய் நாட்டிற்கும் புலம்பெயர்ந்த நாட்டிற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருப்பதாகவும் விளங்கும்..

8. சிறிய, இனம் சார்ந்து காயப்படுத்திய ஒரு நிகழ்ச்சி ஒன்றே சிதறிய இவர்களை ஒன்றிணைந்த புலம்பெயர் சமூகமாக இணைப்பதற்குப் போதுமானதாக அமையும்.

9. மேலும் புலம்பெயர்ந்த இச்சமூகத்தினர் தங்களின் தாய் நாட்டைப் போன்ற ஒரு மாதிரி நாட்டையே தங்கள் புலம்பெயர் இடத்தில் படைத்துக் கொள்வர். சீக்கியர்களின் புலம்பெயர் வாழ்வு இதற்குச் சரியான சான்றாக எடுத்துக்காட்டப்படுகிறது.

10. குறிப்பிடத்தகுந்த மற்றொன்று, தங்கள் தாய் நாட்டில் தங்களிடையே பெரிய வேறுபாடுகளாக வெளிப்படும் வர்க்க வேறுபாடு, பாலியல் வேறுபாடு முதலியவைகள் புலம்பெயர் சமூக வாழ்வில் பெரிய அளவில் புலப்படுவது இல்லை.

11. பொதுவாக இவர்களின் மன அமைப்பில் அங்கே, இங்கே என்ற இடம் சார்ந்த உணர்வுகள் ஆழமாக ஓடிய வண்ணமே இருக்கும்.

12. புலம்பெயர் வாழ்வில் அந்நியமான, நாடு கடந்த ஒரு வெளியில் அடையாளப்படுத்திக் கொள்ளுதல் என்கின்ற ஆழமான மனநிலை அவர்களுக்குள் பல்வேறு உளவியல் நெருக்கடிகளை உருவாக்கிய வண்ணமே இருக்கும். இதனால், குறிப்பாக "இரட்டை மனநிலை" என்கின்ற ஒரு மன அமைப்பு இவர்களுக்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

மேற்கண்ட இந்தத் தனிப் பண்புகள் அவர்களின் கலை இலக்கியங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும். அதனால்தான் புலம்பெயர் இலக்கியம், புலம்பெயர் திறனாய்வு ஆகிய நவீன மொழியாடல்கள் சாத்தியமாகி உள்ளன.

வளர்ச்சியடைந்த இன்றைய முதலாளித்துவச் சமூகத்தில் மேற்கண்ட புலம்பெயர் வாழ்விற்கும் வெளியே முதலாளித்துவத் தேசிய அரசுகளின் நடைமுறையின் விளைவினால் அரசுகளுக்குத் தெரியாமல் மறைந்து வாழக் கூடிய புலம்பெயர் சமூகமும் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. மிகக் குறைந்த கூலிக்கு உடல் உழைப்பைச் செலுத்துகின்றவர்கள் (பாலியல் தொழிலாளிகள் உட்பட), போதைப் பொருட்கள் கடத்துகின்றவர்கள், சட்டங்களை மீறியே வருவாயைத் தேடிக் கொள்ளும் குற்றவாளிகள் முதலியோரும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற

ஒரு வாழ்க்கை முறையை வாழ்ந்து தீர்க்கின்றனர். இத்தகையவர்களுடைய வாழிடம் ஒரு வகையான கற்பனைப் பிரதேசமாகக் கருதத்தக்கதாக இருக்கிறது.

புலம்பெயர் திறனாய்வு இவ்வாறு உலகப் பரப்பு முழுவதும் புலம்பெயர்ந்து வாழக்கூடிய மக்களிடமிருந்து புறப்பட்டு வரக்கூடிய கலை இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கத் தனிப்பண்புகள் விளங்குகின்றன என நம்புகிறது. குறிப்பாகத் தமிழ்ச் சூழலில் இலங்கைத் தமிழர்களின் ஈழப் போராட்டத்திற்குப் பிறகு புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் புலம்பெயர் இலக்கியங்களையும், திறனாய்வையும் திடகாத்திரமாகவும், ஆழமாகவும் செய்து வருகின்றனர். படைப்பாக்கத்தில் மட்டுமல்லாமல் பத்திரிக்கை நடத்துவதிலும் முனைப்போடு செயல்பட்டுத் தமிழில் புலம்பெயர் இலக்கியம் என்ற ஒரு புதிய வகைப்பாட்டினை வகுத்துக் காண வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் நம்மை நிறுத்தியுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. Sudesh Mishra, Diaspora Criticism, P.13.
2. மேலது, ப.16.
3. மேலது, ப.16.

## பயன்பட்ட நூல்

1. Wolfreys Julian, Introducing Criticism At The 21st Century, Rawat Publications, New Delhi.

# 17. சூழலியல் திறனாய்வு

முன்னுரை - சூழலியல் திறனாய்வு: தோற்றம், வரையறை – அமெரிக்காவும் இங்கிலாந்தும் - நிர்மல் செல்வமணியும் சூழலியல் கோட்பாடும் - பண்பாடும் இயற்கையும் - அறிவியலும் சூழலியல் திறனாய்வும் - சூழலியல் திறனாய்வின் அணுகுமுறைகள்.

## முன்னுரை

சமூகத்தில் ஒரு சிக்கல் முதிர்ந்து நிற்கும் போது அதற்கேற்ப இலக்கியக் கல்வியும் தன்னளவில் செயலாற்ற நேர்கிறது. சான்றாகத் தேசியம் என்ற கட்டமைப்பு மேலெழுந்த போது தேசிய இலக்கியமும் திறனாய்வும் அதன் விளைச்சலாக அமைந்தன. பாரதியாரின் பங்களிப்பு இலக்கியத் தளத்தில் இப்படித்தான் அமைந்தது. நமது காலகட்டத்தில் அளவுக்கு மீறிய தொழிற்சாலைகளின் பெருக்கம், அதன் தொடர்ச்சியாக எரிசக்திகளின் தேவைக்காக அணு உலைகளின் பெருக்கம், நச்சு கக்கும் பல்வேறு இயந்திரப் பொருட்களின் உற்பத்தி, பெருநகரங்களின் உருவாக்கம், இதனால் நிலம், காற்று, நீர், வெளி முதலிய இயற்கை ஆற்றல் மாசுபடுதல், உலகம் வெப்பமடைதல் என பூமியின் இருப்பிற்கே ஆபத்து வரும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே 'இந்தப் பூமியைக் காப்போம்', 'வரும் தலைமுறைக்கு வாழ்விடம் அளிப்போம்' என்கின்ற கருத்தாக்கங்கள் முன்னுக்கு வருகின்றன. வாழ்க்கையின் அனைத்து வடிவங்களிலும் இந்தப் பேராபத்தினை உணர்ந்தே தீரவேண்டிய நெருக்கடி முற்றியுள்ளது. எனவே இலக்கியக் கல்வயிலும் இந்தச் சுற்றுச்சூழல் குறித்த அக்கறைகள் பெரும் ஆர்வத்தோடு உரையாடலுக்கு உள்ளாகின்றன. இதன் விளைவாகத்தான் சூழலியல் திறனாய்வு என்கின்ற புதிய ஓர் இலக்கியக் கோட்பாடு குறித்த மொழியாடல் முன்னுக்கு வந்துள்ளது.

## சூழலியல் திறனாய்வு: தோற்றம், வரையறை

உலகில் உள்ள எல்லாச் சாலைகளும் (வானம் வழியாக இருந்தாலும் சரி, நிலம் வழியாக இருந்தாலும் சரி, நீர் வழியாக இருந்தாலும் சரி) அமெரிக்காவை நோக்கியும், அமெரிக்காவில் இருந்து புறப்படுகின்றவைகளாகவும் இருக்கின்ற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவேதான் சூழலியல் திறனாய்வைக் குறித்துப் பேசும் போதும் அமெரிக்காவில், ஆங்கில மொழியில் எவ்வாறு அது தோற்றம் கொண்டது; வளர்ந்தது எனப் பேச வேண்டிய நிலை இருக்கிறது. எல்லா நாடுகளிலும், எல்லா மொழியிலும் மனித வாழ்விற்குப் பேராபத்தாக வளர்ந்திருக்கும் இந்தச் சுற்றுச்சூழல் கேடு குறித்துப் பேசப்படும்தான் என்றாலும் அமெரிக்காவில், ஆங்கில மொழியில் நடக்கும் விவாதங்களும் உரையாடல்களும்தான் உடனுக்குடன் உலகம் முழுவதும் எடுத்துச் சென்று விதைக்கும்படியான உலக அமைப்பு நிலவிக் கொண்டு இருக்கிறது.

சூழலியல் திறனாய்வு என்றால் என்ன? புதிதாக வளர்ந்து வரும் இத்திறனாய்வு, பன்முகப்பட்ட துறைகளும் கலந்த ஒரு கல்வி முறை என்பதனால் பல்வேறு விளக்கங்கள், பல்வேறு கோணத்தில் சொல்லப்படுகின்றன. ஆனாலும் அமெரிக்காவில் உள்ள நெரேடா (Nerada ) பல்கலைக்கழகத்தில் 'இலக்கியமும் சுற்றுச்சூழலும்' என்ற தனித்துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் செரில் கிலாட்பெல்டி (Cheryil Glotfelty) என்பார் அளித்த விளக்கமே இதன் அடிப்படை வரையறையாகக் கொள்ளப்படுகிறது. அவர் இவ்வாறு இதை வரையறை செய்கிறார்:-

> இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு'

என்கின்றார். ஆனால் சுற்றுச்சூழல் என்பதற்கும் இயற்கை என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. எனவே இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு என வரையறுப்பதே பொருத்தமாக இருக்கும் எனப் பலர் கருதுகின்றனர். செரில் கிலாட்பெல்டி இச்சூழலியல் திறனாய்விற்குப் பல பங்களிப்புகள் செய்த ஒரு சிறந்த கல்வியாளராக அறியப்படுகிறார். சூழலியல் திறனாய்வு (Eco Criticism) என்ற சொற்கூட்டை முதன்முதலில் பயன்படுத்தியவராக வில்லியம் ரூக்கர்ட் (William Rueckert) என்பார் கருதப்படுகிறார். இவர் 1978-இல் தான் எழுதிய

'இலக்கியமும் சூழலியலும்: சூழலியல் திறனாய்வில் ஒரு சோதனை' (Literature and Ecology: An Experiment in Ecocriticism) என்ற கட்டுரையில்தான் இச்சொற்கூட்டைப் பயன்படுத்தினார். கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக இது குறித்து யாரும் பேசப்படாத சூழலில் 1989-இல் நடந்த மேற்கத்திய இலக்கியக் கழகக் கூட்டத்தில் அப்பொழுது ஒரு கல்லூரி மாணவியாக இருந்த செரில் கிலாட்பெல்டிதான் வில்லியம் ருக்கர்ட்டின் அந்தச் சொற்கூட்டை மீண்டும் பயன்படுத்திச் சூழலியல் திறனாய்விற்குத் தன் கட்டுரையின் மூலம் உயிர் கொடுத்தார். மேலும் இவர் ஹெரால்டு ப்ரோம் (Harold Fromm) என்பாருடன் இணைந்து சூழலியல் திறனாய்வு குறித்து மிகவும் அடிப்படையான பெரிதும் பயன்படக்கூடிய ஒரு கட்டுரைத் தொகுப்பினைக் (The Ecocriticism Reader: Landmarks in Literary Ecology, University of Georgia Press, 1996) கொண்டு வந்தார். மேலும் 1992-இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட இலக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்குமான கல்வி குறித்த சங்கம் (The Association for the Study of Literature and Environment - ASLE) நிறுவப்பட்டது. அதில் துணை நிறுவனராக இருந்து செயல்பட்டார். இச்சங்கம் 1993-இல் தனக்கென ஓர் இதழும் கொண்டு வந்தது. இவ்வாறு சுற்றுச்சூழல் திறனாய்வில் செரில் கிலாட்பெல்டி முக்கியமான கல்வியாளராக அறியப்படுகிறார்.

டேவிட் மாசல் (David Mazal) என்பார் சூழலியல் திறனாய்விற்கு ஒரு முக்கியமான பங்களிப்பு செய்தார். 'ஒரு நூற்றாண்டுத் தொடக்க காலச் சூழலியல் திறனாய்வுகள்' (A Century of Early EcoCriticism – 1864-1964) என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டார். இதன் மூலம் சூழலியல் திறனாய்விற்கு ஒரு வரலாற்று முகத்தை உருவாக்கினார். இலக்கிய உருவாக்கத்தில் தொடர்ந்து இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு குறித்த தேடல் ஒரு பெரும் வெளியாகச் செயல்பட்டு வந்துள்ளது என்கிற உண்மை வெளிக்கொணரப்பட்டது. தொடர்ந்து லாரன்ஸ் பௌல் (Lawrence Buell) என்பவரால் இது ஒரு முக்கியமான இலக்கிய இயக்கமாக வளர்த்தெடுக்கப்பட்டது. 'சுற்றுச்சூழல் திறனாய்வின் எதிர்காலம்' என்ற அவருடைய நூல் பின் அமைப்பியல் கோட்பாடுகளையும் பயன்படுத்திக் கொண்டு இத்திறனாய்விற்குச் செறிவூட்டியது. மேலும் சூழலியலும் பெண்ணியமும், சூழலியலும் அறமும், சூழலியலும் அரசியலும், சூழலியலும் பொருளாதாரமும் முதலிய தலைப்புக்களில் ஆராய்ந்து சூழலியலைப் பெரிய அளவில் வளர்த்தெடுத்தது. அவருடைய மற்றொரு நூலான 'சுற்றுச்சூழல் கற்பனைகளும் அழியும் பூமி குறித்த இலக்கியங்களும்' என்ற நூலும் சூழலியல் கோட்பாட்டிற்குப் பெரிதும் பங்களிப்பைச் செய்துள்ளது. சூழலியல்

திறனாய்வின் மையப் புள்ளியாக விளங்கும் நிலம், வெளி, மொழி, கற்பனை, அரசியல், அறம் முதலியவை குறித்து விரிவாக ஆராய்கிறது இந்நூல்.

## அமெரிக்காவும் இங்கிலாந்தும்

அமெரிக்காவில் சூழலியல் திறனாய்வு இயற்கை குறித்து எழுதப்பட்ட புனைகதை அல்லாத எழுத்துக்களை முதன்மைப்படுத்தித்தான் முன்மொழியப்பட்டது. இயற்கை ஆர்வலர்களான ஆ.ட.பிள்யூ. எமர்சன் (1803-1882), மார்க்ரெட் புல்லர் (1810-1850), ஹெறச்.டி.துரோ (1817-1862) ஆகியோர் எழுதிய இயற்கை குறித்த கட்டுரைகளை இத்திறனாய்வாளர்கள் தங்கள் திறனாய்வுக் கோட்பாட்டை வளர்த்தெடுக்கப் பயன்படுத்திக் கொண்டனர். இதேபோல் 1990-களில் (1980-களில் அமெரிக்காவில் சூழலியல் திறனாய்வு தோன்றியது) இங்கிலாந்தில் இச்சூழலியல் திறனாய்வு பரவிய போது அங்கே இது பெரும்பாலும் 'பச்சைத் திறனாய்வு' (Green Criticism) என்ற சொற்கூட்டால் அழைக்கப்பட்டது[2]. அமெரிக்காவில் எமர்சன், துரோ போன்ற கட்டுரை எழுத்தாளர்களின் எழுத்துக்கள் சூழலியல் திறனாய்வில் முதன்மை பெற்றது என்றால் இங்கிலாந்தில் வேர்ட்ஸ்வொர்த்தினுடைய கிராமம் சார்ந்த பாடல்கள் சூழலியல் திறனாய்வின் நோக்கில் முதன்மை பெற்றன. அவருடைய The Prelude, Home at Grasmere, The Recluse முதலிய படைப்புக்கள் சூழலியல் திறனாய்வு நோக்கில் புது விளக்கம் பெற்றன. இயற்கைக்கும் மனிதர்களுக்குமான பிணைப்பு எவ்வளவு ஆழமானது; உணர்வுபூர்வமானது; அது எவ்வாறு இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் பாட்சியினாலும், நகரமயமாதலினாலும் ஊனப்பட்டுப் போகின்றது என்பதெல்லாம் வேர்ட்ஸ்வொர்த் கவிதைக்குள் அமைந்து கிடக்கின்றது என்பது வெளிக்கொணரப்பட்டது.

## நிர்மல் செல்வமணியும் சூழலியல் கோட்பாடும்

தமிழ் இலக்கியத்திலும் சூழலியல் திறனாய்வை மேற்கண்டவாறு சங்க இலக்கியப் பாடல்களிலும் தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டிலும் நிகழ்த்திக் காட்டுகிறார் பேராசிரியர் நிர்மல் செல்வமணி; (திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தில் தற்போது ஆங்கிலத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்) தன்னுடைய நூல்களுக்கு Tinai I, II & III என்றே பெயர் சூட்டிச் சங்க இலக்கியக் கவிதைகளையும், தமிழர்தம் திணைக் கோட்பாட்டையும் சூழலியல் திறனாய்வு மூலமாக உலக அரங்கிற்கு எடுத்துச் செல்கிறார். சூழலியல் திறனாய்விற்கென்று ஓர் ஆங்கில இதழையும்

கொண்டு வருகிறார் (Indian journal of Ecocriticism). இயற்கைக்கும் மனிதர்களுக்குமான உறவை மூன்று தளத்தில் நிர்மல் செல்வமணி பிரிக்கிறார்.

1. ஒருங்கிணைந்த தளம் (Integrative Oikos)
2. அதிகாரப் படிநிலைத் தளம் (Hierrachic Oikos)
3. ஒழுங்கு சிதைத் தளம் (Anarchic Oikos)

ஒருங்கிணைக்கப்பட்ட முதல் தளத்தில் இறைநிலை (Sacred), இயற்கை, பண்பாடு, மனிதர்கள் ஆகியவை இணக்கமாக உள்ளன. இங்கே உறவுகள் மேல், கீழ் என்றில்லாமல் நெடுக்காகவும் குறுக்காகவும் என்று சம தளத்தில் உள்ளன.

அதிகாரப் படிநிலைத் தளத்தில் இறைநிலை மேலாகவும், இயற்கை கீழாகவும், மனிதர்கள் நடுவிலுமாக உள்ளனர். ஆள்பவர் மேலாகவும், ஆளப்படுபவர் கீழாகவும் படிநிலைப்படுத்தப்படுகின்றனர். நிலம்கூட நன்செய் நிலம் உயர்ந்ததாகவும், புன்செய் நிலம் கீழானதாகவும் படிநிலைப்படுத்தப்படுகிறது. விலங்குகள் உலகிலும் கூட வீட்டு விலங்குகள் உயர்வானவைகளாகவும், காட்டு விலங்குகள் கீழானவைகளாகவும் கட்டமைக்கப்படுகின்றன.

ஒழுங்கு சிதைத் தளத்தில் படிநிலைகள் குழப்பத்திற்கு உள்ளாகின்றன. இறைநிலை சந்தேகத்திற்கு உரியதாகின்றது. சமய உணர்வுகளைவிடப் பணமே மனித மனத்தில் பெரிய இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. இயற்கைகூடப் பணம் கொட்டும் ஒரு முதலீடாக மாற்றப்படுகிறது. அதைவிட இன்னும் மனிதர்களே ஒரு முதலீடாக மட்டுமே மாறி விடுகிறார்கள்.

மேற்கண்ட சிந்தனைகளை நிர்மல் செல்வமணி தொல்காப்பியரின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் கோட்பாட்டோடும் சங்க இலக்கியப் பாடல்களோடும் சான்று காட்டி விளக்கும் போது சூழலியல் திறனாய்வின் அருமை புலப்படுகிறது. தமிழர்தம் திணைக் கோட்பாடு புது வெளிச்சத்தில் பொலிவு பெறுகிறது. சங்க இலக்கியம் மட்டுமல்ல, இடைக்காலப் பக்தி இலக்கியம், ஐம்பெரும் காவியங்கள், சிற்றிலக்கியங்கள், தல புராணங்கள் எனப் பலவும் சூழலியல் திறனாய்வின் மூலம் புது விளக்கங்கள் பெறக் காத்திருக்கின்றன.

சூழலியல் திறனாய்வின் அடிப்படை அக்கறையாக இருப்பது மனிதர்களின் பண்பாட்டிற்கும் இயற்கைக்குமான உறவுதான். பொதுவாக அமைப்பியல், பின் அமைப்பியல் முதலிய திறனாய்வுக் கோட்பாடுகள் பலவும் நமது வாழ்க்கையில் எல்லாமே (இயற்கை உட்பட) சமூகத்தாலும் மொழியினாலும் கட்டமைக்கப்பட்டவைகள்தான் என்பதை அழுத்தமாக வலியுறுத்துகின்றன. சூழலியல் திறனாய்வின் அடிப்படைக் கருத்தாக்கமே இந்தப் போக்கினை முற்றிலுமாக நிராகரிப்பதுதான். ஒரு சூழலியல் திறனாய்வாளர், இயற்கை என்பது மனிதர்களுக்கு வெளியே தனியாக நிற்கிறது என்ற நம்பிக்கையில்தான் இயங்கத் தொடங்குகிறார். இயற்கை ஓர் உயிர்ப் பொருளாக நம்மேல் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதை நாம் தவறாகப் பயன்படுத்தும் போது அது நமக்குப் பெரும் ஆபத்தினைக் கொண்டு வந்து கொடுக்கிறது. இயற்கை என்று சொல்லும் போது அந்தச் சொல் ஆதிக்கச் சக்திகளின் உரையாடலில் தவறாக ஒவ்வொரு பண்பாட்டிலும் ஒவ்வொரு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சமூகத்தில் மேல், கீழ், பணக்காரன், ஏழை, என்று இருப்பதெல்லாம் இயற்கைதான் என்று சொல்வதன் மூலம் எவ்வாறு இயற்கை என்ற இந்தச் சொல் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இதனால்தான் மனிதர்கள் கட்டமைக்கும் இயற்கை என்ற இந்த வார்த்தைக்கு வெளியே இயற்கை என ஒன்று தனியாக இல்லை என்ற வாதம் வலுவாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய சிந்தனைப் போக்கினைச் சூழலியல் திறனாய்வு ஒத்துக் கொள்வதில்லை. மனிதர்களின் வார்த்தைகளுக்கு வெளியே, பண்பாட்டிற்கு வெளியே இயற்கை என்பது தனியாக இயக்கம் கொண்டிருக்கிறது. மனிதர்கள் உட்பட அந்த இயற்கைக்குள் அடக்கம். அப்படி ஒருகாலத்தில் தூய்மையான இயற்கையோடு இருந்தவர்கள்தான் வரலாற்றுப் போக்கில் மாறி மாறி இயற்கையிலிருந்து விலகி இன்று பண்பாட்டு மனிதர்களாகி இருக்கிறார்கள். சூழலியல் திறனாய்வு இதை இவ்வாறு விளக்குகிறது:-

நிலப்பரப்பு 1 – வெட்ட வெளி (Wilderness) (எ.டு: பாலைவனம், கடல், மனித வாழ்வற்ற கண்டம்)

நிலப்பரப்பு 2 – வளமான காட்சிப் பரப்பு (காடுகள், குளங்கள், மலைகள், அருவிகள், செங்குத்துப் பாறைகள்)

நிலப்பரப்பு 3 – நாட்டுப்புறப் பரப்பு (குன்றுகள், வயல்கள், மரக்கட்டைகள்)

நிலைப்பாடு 4 – வீடு சார்ந்த சூழலியல் கூறுகள் (பூங்காக்கள், தோட்டங்கள், தெருக்கள்)'

இவ்வாறு மனிதர்கள் தூய இயற்கை வெளியிலிருந்து வரலாற்றுப் போக்கில் பண்பாட்டு வெளிக்குள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுடைய பண்பாட்டு வெளிகளான தோட்டங்களும், நகரங்களும், பூங்காக்களும் முற்றும் முழுதாக இயற்கையிலிருந்து விலகியவைகளும் அல்ல. வரலாற்றின் முதன் முறையாக இந்தப் பூமிக்கோளத்தின் எந்தப் பகுதியும் மனித வாடையே அற்ற வெட்ட வெளியாக அறவே இல்லை. பூமிக்கோளத்தின் அனைத்துப் பகுதிகளும் உலக வெப்பம், அணுக்கதிர் வீச்சு, அழிக்க முடியாத குப்பைக் கூளங்களின் குவியல் என்னும் மனிதன் உருவாக்கிய சுற்றுச்சூழல் சிக்கலால் பாதிக்கப்பட்டுள்ளன. இதைத்தான் சூழலியல் திறனாய்வு குறிப்பாக இங்கிலாந்தைச் சார்ந்த பச்சைத் திறனாய்வு அழுத்தமாக வலியுறுத்துகிறது. இத்தகைய உலக அரசியல் மற்றும் பொருளாதாரம் சார்ந்த சிந்தனைப் போக்கின் விளைவாகத்தான் சமூகச் சூழலியல், சூழலியல் பெண்ணியம் முதலிய கிளைகளும் சூழலியல் திறனாய்வில் தோன்றியுள்ளன.

## சூழலியல் பெண்ணியம்

சுற்றுச்சூழல் மாசுபடும் பொழுது பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகிற பாலினம் பெண்கள்தான் என்கிற பார்வையிலிருந்து சூழலியல் பெண்ணியம் உருவாகிறது. மறுஉற்பத்தியில் பெரிதும் பங்களிப்பு செய்கிற தாய்மைதான் சுற்றுச்சூழல் கேட்டிற்கு முதல் பலியாகிறது. மேலும் சுற்றுச்சூழல் கேட்டினால் பஞ்சம், பட்டினி, வேலையின்மை என வறுமை பரவும் போதும் பெரிதும் பாதிப்பிற்குள்ளாவது பெண்ணினம்தான். புயல், சுனாமி, எரிமலை முதலிய இயற்கைச் சீற்றத்தின் போதும் பேரழிவிற்கு உள்ளாவது பெண்கள்தான். இத்தகைய நோக்கில் சூழலியல் பெண்ணியம் தனக்கான திட்ட வரையறைகளை வகுத்துக் கொண்டு அதற்கேற்ப இலக்கியக் கல்வியை அணுக முயல்கிறது. இதுபோலவே சமூகச் சூழலியலும் சமூகத்தை முன்னிறுத்திச் சுற்றுச்சூழலை ஆராய முயல்கிறது. சமூகத்தில் மனிதன் தன் தேவையை நிறைவேற்றி வாழ்ந்தாக வேண்டும். சமூகத் தேவைக்கோ எல்லையில்லை. ஆனால் இயற்கையோ எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. இதை உணர்ந்து சமூக மனிதர்கள் இயற்கையைப் பக்குவமாகப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கைக்கு எந்த ஊறும் இல்லாமல் மனித வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும் எனக் கருதுகிறது சமூகச் சூழலியல். மனிதனை மையப்படுத்திப் பார்க்கிற போக்காக இது அமைந்துள்ளது.

# அறிவியலும் சூழலியல் திறனாய்வும்

கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலேயே கிரேக்கத் தத்துவ ஞானியான பித்தகோரஸ் புகழ்பெற்ற ஒரு வாசகத்தை முன்மொழிந்தார். "இந்தப் பூமிக்கோளில் எல்லாவற்றுக்கும் அளவுகோல் மனிதன்தான". இன்றுவரை மனிதர்களை முதன்மைப்படுத்தும் ஐரோப்பாவின் மனிதமையவாதத்திற்கு அடிப்படையாக அமைந்தது இந்த வார்த்தைக் கோலம். சூழலியல் திறனாய்வு கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழும் இந்தப் பூமிக்கோளத்தில் ஒவ்வொன்றிற்கும் வாழ்வதற்கு உரிமை இருக்கிறது. அனைத்தும் மனிதர்களுக்காகவே என்ற விவிலியப் பார்வை இன்றைக்குப் பூமிக்கோளத்தையே பெரும் ஆபத்தில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது. அறிவியலின் பிரமாண்டமான வளர்ச்சியினால் ஏற்பட்ட தொழில்நுட்பக் கருவிகள் இந்தப் பூமிக்கோளத்தை அழிவுக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன. எனவே சூழலியல் திறனாய்வின் ஒரு பிரிவினரான 'தீவிரச் சூழலியல்வாதிகள்' (Deep Ecologists) அறிவியலின் தொழில்நுட்பம்தான் எல்லாச் சிக்கல்களுக்கும் மூலக்காரணம் என முன்மொழிகின்றனர். இவர்கள் சில சூழலியல்வாதிகள் சொல்வது போல 'இந்தத் தொழில்நுட்பத்தைப் பக்குவமாகப் பயன்படுத்தி நுகர்வையும் உற்பத்தியையும் ஒழுங்குப்படுத்திக் கொண்டு இந்தப் பூமிக்கோளைக் காப்பாற்றிவிடலாம்; எனவே இந்த அறிவியல் தொழில்நுட்பம் ஒன்றும் அச்சப்படத்தக்கதல்ல' என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இவர்கள் முன்வைப்பது இந்த அறிவியல் தொழில்நுட்பத்தில் இருந்தே மனிதர்கள் முற்றிலுமாக விடுதலை பெற வேண்டும். மீண்டும் பழைய இயற்கை நிலைக்கே (Get back to nature) திரும்ப வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இவர்கள் மனிதர்களை மையப்படுத்தி உருவாக்கிய சுற்றுச்சூழல் என்ற சொற்கூட்டைப் பயன்படுத்த விரும்பவில்லை. மனிதர்களுக்குள் அகப்படாமல் புறத்தே நிற்கும் இயற்கை என்ற சொல்லையே பயன்படுத்த விரும்புகின்றனர். ஆனால் அறிவியல் தொழில்நுட்பத்திற்குச் சார்பாகப் பேசுபவர்கள் 'அறிவியல்தான் இந்த உலகத்தை இந்தளவிற்கு விளக்கியுள்ளது. இந்த உலகத்தை இந்தளவிற்குப் பயன்படுத்தக் கற்றுக் கொடுத்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் பூமி, பேரழிவின் எல்லையில் நிற்கிறது என்ற ஞானத்தையே அறிவியல்தான் ஆராய்ந்து கூறியுள்ளது. எனவே அறிவியலையும் அதன் தொழில்நுட்பத்தையும் குறை கூறுவதில் பொருளில்லை. அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது எனத் தெரியாமல் தன் தலை மேலேயேதான் மண் அள்ளிப் போட்டுக் கொள்ளும் தன்முனைப்புமிக்க மனிதர்களைத்தான்

திருத்த வேண்டும். அத்தகைய விழிப்புணர்வைச் சூழலியல் திறனாய்வின் மூலம் உருவாக்க முடியும்' என நம்புகின்றனர்.

சூழலியல் திறனாய்வின் மற்றொரு போக்காகக் கருதத்தக்கது இந்தப் பூமியில் மனிதர்கள் மட்டுமல்ல, வேறு பல உயிரினங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த உயிரினங்களைக் குறித்தெல்லாம் உயிரியல் அறிஞர்கள் மிக நுட்பமாக ஆராய்ந்து பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளனர். பன்முகப்பட்ட உயிரினங்களின் இருப்பு என்பது எவ்வாறு சூழலைச் சமப்படுத்திக் கொள்ள பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையெல்லாம் அறிவியல்பூர்வமாக விளக்கியுள்ளனர். இந்தத் தகவல்களையெல்லாம் இலக்கியத்தை வாசிப்பதற்கும், கற்றுத் தருவதற்கும், படைப்பதற்கும், திறனாய்வு செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என விளக்குகிறார் வில்லியம் ரூக்கர்ட் தன்னுடைய புத்தகத்தில். இதே கோணத்தில் மைக்கெல் பி. பிரான்ச் என்பவர் சூழலியல் திறனாய்வைக் கீழ்க்கண்டவாறு வரையறை செய்கிறார்:-

> சுற்றுச்சூழல் திறனாய்வு என்பது இலக்கியத்தில் உள்ள இயற்கையை ஆராய்வதன்று. இது ஓர் இயற்கை சார்ந்த உலகப் பார்வை. மனித இனத்தோடு மனிதன் அல்லாதவைகளையும் அவைகளின் சுற்றுச்சூழல்களையும் ஒரே இனமாக இணைத்து மனித இனத்தைப் பெருக்கிக் காட்டும் முயற்சியாகும்.

இத்தகைய பார்வையில் இயற்கை உயிரினங்களில் ஓர் உயிராக மட்டுமே மனிதன் தன்னைக் கருதிக்கொள்ள வேண்டும். எந்தவிதத்திலும் மற்ற உயிர்களைவிட மேலானவன் என்றோ சிறப்பிற்குரியவன் என்றோ புனைந்து கொண்டு வாழ்வைப் புண்ணாக்கக் கூடாது என்கிற தெளிவு கிடைக்கிறது. சூழலியல் திறனாய்வின் மிக இன்றியமையாத பார்வை இது. மரத்தையும், ஆற்றையும், நீர் நிலைகளையும், மலைகளையும், நாயையும், எலியையும், சேவலையும், மாட்டையும், பூக்களையும் தெய்வமாகப் பாவனை செய்து கொண்டாடிய இந்திய மரபிற்குச் சூழலியல் திறனாய்வு பெரிதும் ஒத்துப் போவதைப் பார்க்க முடிகிறது.

## சூழலியல் திறனாய்வின் அணுகுமுறைகள்

சூழலியல் திறனாய்வின் மூலம் இலக்கியத்தை எவ்வாறெல்லாம் அணுகலாம் என்பதைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

1. ஒரு மொழியில் இடம் பெற்றுள்ள புகழ்பெற்ற இலக்கியங்களை சூழலியல் பார்வையில் அணுகி அந்த இலக்கியங்களில் இயற்கை உலகம் எவ்வாறு அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதில் கவனம் குவித்து ஆராயலாம்.

2. இலக்கியத்தில் சூழலியல் சார்ந்த கருத்தாக்கங்கள் பாடுபொருளாகி இருக்கும் தன்மையை வெளிக் கொணர்தல்.

3. இயற்கையைப் பாடுதல் என்பதையே குறியாகக் கொண்டு பாடிப் புகழ்பெற்ற கவிஞர்களின் கவிதைகளைச் சூழலியல் நோக்கில் விளக்குதல்.

4. உயிரியல் ஆய்வு மூலம் கிடைத்த பல்வேறு நுட்பமான தகவல்களை முன்னிறுத்தி வட்டார இலக்கியங்களை மட்டுமல்லாமல் பயண இலக்கியம், நினைவுக் குறிப்புகள், கட்டுரைகள் ஆகியவைகளையும் ஆராயதல்.

5. சூழலியல் திறனாய்வின் மிக முக்கியமான அணுகுமுறை இது. அதாவது வாழ்வில் ஒவ்வொன்றும் சமூகக் கட்டுமானத்தினாலும், மொழியின் கட்டுமானத்தினாலும் நிர்ணயிக்கப்பட்டவை என்ற கோட்பாட்டுப் பார்வையிலிருந்து வெளியேறி, சூழலியல் திறனாய்வின் அணுகுமுறையான 'இந்த இயற்கை நம்மைவிட மேலானது, நமக்குப் புறத்தே தனியாக இயங்குவது' என்ற கோணத்தில் இலக்கியக் கல்வியை நடத்திச் செல்வது".

இவ்வாறு சூழலியல் திறனாய்வின் அணுகுமுறையோடு அணுகும் போது பழைய இலக்கியத்திலிருந்து நவீன இலக்கியம் உட்பட அனைத்தும் புதிய வெளிச்சத்தை அளிப்பதற்கான வாய்ப்புடையதாக மாறுகின்றன. ஆனால் பல்வேறு அறிவுத் துறைகளின் (சமூகவியல், மானுடவியல், உளவியல், பண்பாட்டியல், அறிவியல், உயிரியல், சுற்றுச்சூழலியல், வரலாற்றியல், பொருளாதாரவியல்) சங்கமமாக அமைவதால் (Interdisciplinary) சூழலியல் திறனாய்வும் பல்வேறு விதமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தன்மையை ஸ்காட் ஸ்லோவிக் (Scott Slovic) என்ற அமெரிக்கச் சூழலியல் திறனாய்வாளர் 'என்னைக் குறித்த பாட்டு' என்ற தலைப்பில் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் எழுதிய புகழ்பெற்ற வரியான 'நான் பெரிய அளவிலானவன், நான் பன்முகங்களைக் கொண்டவன்' என்ற வரியைப் பயன்படுத்திச் சூழலியல் திறனாய்வும் இவ்வாறு பன்முகப்பட்டது என்கிறார். உலக அளவில் செல்வாக்குப் பெற்ற அணுகுமுறை என ஒன்று சூழலியல் திறனாய்வில் உருவாகிவிடவில்லை. எனவே சூழலியல் திறனாய்விலோ அல்லது சூழலியல் திறனாய்வைக்

கருத்தலிலோ ஒரு தனி மாதிரி எதுவும் இல்லை என்பதுதான் யதார்த்தம். ஆனால் தமிழ்ச் சூழலில் சூழலியல் திறனாய்வை நிகழ்த்திக் காட்டுவதற்கான இலக்கியத் தளம் பரந்து விரிந்து கிடக்கிறது என்பது மட்டும் உண்மை.

தமிழ்த் திறனாய்வுச் சூழலில் சூழலியல் திறனாய்வு இன்னும் அறிமுகமாகவில்லை என்று கூறும் நிலைதான் இருக்கிறது. காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் புதுச்சேரி மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் முதுகலை சேர்க்கப்பட்டு இந்நூலாசிரியர் இதை மாணவர்களுக்குப் பாடமாக நடத்தி வந்துள்ளார். அம் மையத்தில் நிர்மல் செல்வமணி போன்ற சூழலியல் திறனாய்வாளர்களை அழைத்து ஒரு நாள் கருத்தரங்கு 2010-இல் நிகழ்ந்தது என்பதும் குறிப்பிடத்தகுந்தது. மேலும் ஆய்வுக் கோவையில் சுரேஷ் பிரடரிக் என்பார் 'சூழ்நிலைத் திறனாய்வு – ஓர் அறிமுகம்' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரை மிகச்சிறப்பாக, சுருக்கமாகச் சூழலியல் திறனாய்வையும் நிர்மல் செல்வமணியின் சூழலியல் கோட்பாட்டையும் அறிமுகப்படுத்துகிறது.

## அடிக்குறிப்புகள்

1. "Simply defined, ecocriticism is the study of the relationship between literature and the physical environment - Cheryll Glotfelty

2. Peter Barry, Beginning Theory, P.242.

3. மேலது, ப.246.

4. மேலது, ப.244-245.